**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – அரசு மறுவாழ்வு இல்லங்கள் – அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கி இருந்த இல்லவாசிகளுள் சிலர் இயற்கை மரணம் அடைந்தது – அடக்கம் செய்திட்ட செலவினத்திற்கு 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு ரூ.88,000/– கூடுதல் நிதி ஒதுக்கீடு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.05, நாள்: 03.03.2014**

**விஜய–மாசி 19, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.62, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04.06.2012.
2. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.318/மஇநிர்.3/2012, நாள் 22.07.2013, 09.10.2013 மற்றும் 08.01.2014.

----

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள இல்லவாசிகள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கத்தில் தண்டனை பெற்ற இல்லவாசிகள் இயற்கை மரணமடைந்தால், அவர்களை அடக்கம் செய்வதற்கு ஆகும் ஈமச் சடங்கிற்கான செலவினத்தை ரூ.500/– லிருந்து ரூ.2,000/– ஆக உயர்த்தியும், இக்கூடுதல் செலவினத்திற்காக 2012–2013 ஆம் நிதியாண்டிற்கு ரூ.22,000/– நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள், அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியுள்ள இல்லவாசிகள் இயற்கை மரணம் எய்தினால் அவர்களை அடக்கம் செய்யும் ஈமச் சடங்கிற்கான செலவினத் தொகை, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசித்து மரணம் எய்திய 11 நபர்களை அடக்கம் செய்ய ஒரு நபருக்கு ரூ.2,000/– என்ற வீதத்தில் ரூ.22,000/– நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளதனை குறிப்பிட்டு, 10 அரசு மறுவாழ்வு இல்லங்களிலும், 1200 எண்ணிக்கைக்கு மேல் இல்லவாசிகள் தங்கியுள்ளதாகவும், இவர்கள் அனைவருமே 50 வயதுக்கு மேல் உள்ளதால் உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களாக இருப்பதால், ஒவ்வொரு இல்லத்திலும் வருடத்தில் குறைந்தது 4 அல்லது 5 நபர்களுக்கு மேல், இயற்கை மரணம் அடைவதாகவும், இதனால் ஒரு இல்லத்திற்கு 1 நபர் என்ற கணக்கில் வழங்கப்பட்ட தொகை போதுமானதாக இல்லை எனவும், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் தங்கியிருந்து இயற்கை மரணம் அடைந்தவர்களுக்கு ஈமச் சடங்கிற்கான தொகை வழங்கப்படாமல்

**[த.பி.பா]**

நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆகையால், 2013–2014 ஆம் நிதியாண்டில், 10 அரசு மறுவாழ்வு இல்லங்களில் வசித்து, இயற்கை மரணமடைந்த இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்காக வழங்கப்பட்ட நிதி ஒப்பளிப்பு ரூ.22,000/– அனைத்து இல்லங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு, மேற்படி இல்லங்களில் இயற்கை மரணமடைந்த 55 நபர்களில், 11 நபர்களுக்கு, நபர் ஒருவருக்கு ரூ.2,000/– வீதத்தில் செலவிடப்பட்டதாகவும், எஞ்சிய 44 நபர்களுக்கு ரூ.2,000/– வீதம் ரூ.88,000/–, 2013–2014 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை பிறப்பிக்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மேற்படி, முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, அரசு மறுவாழ்வு இல்லங்களில் மரணமடைந்த இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்காக, 2012–2013ம் நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்ட நிதி ரூ.22,000/–, 11 இல்லவாசிகளுக்கு ரூ.2,000/– வீதம் செலவிடப்பட்டுவிட்ட நிலையில், மீதமுள்ள 44 இல்லவாசிகளின் ஈமச் சடங்கிற்கென செலவிடப்பட்ட தொகை ரூ.88,000/–ஐ (ரூபாய் எண்பத்து எட்டாயிரம் மட்டும்) பின்வரும் அரசு மறுவாழ்வு இல்ல விவரப்படி, நிதி ஒப்பளிப்பு வழங்கியும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி அளித்தும் அரசு ஆணையிடுகிறது:–

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | மாவட்டம் | இறப்பு எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | செல்லியம்பட்டி | தருமபுரி | 7 |
| 2. | பர்கூர் | கிருஷ்ணகிரி | 5 |
| 3. | தேவியாக்குறிச்சி | சேலம் | 5 |
| 4. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் | 5 |
| 5. | விண்ணப்பள்ளி | ஈரோடு | 7 |
| 6. | யா. புதுப்பட்டி | மதுரை | 3 |
| 7. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 10 |
| 8. | மல்லவாடி | திருவண்ணாமலை | 6 |
| 9. | பரனூர் | செங்கல்பட்டு | 5 |
| 10. | உளுந்தூர்பேட்டை | விழுப்புரம் | 2 |
| | **மொத்தம்** | | 55 |

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர் இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – I–திட்டத்தில் சேராதது – KL–தொழுநோய் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லம் – 05–அலுவலகச் செலவுகள் – 02–ஏனைய சில்லறைச் செலவுகள்”. (து.தொ.கு.2235–02–104– KL-0527)**

5. மேலே பத்தி 3–ல், ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ.88,000/– இறுதி திருத்த நிதியொதுக்கம் 2013–2014ல் சேர்க்கப்படும். அவ்வாறு சேர்க்கப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு

[த.பி.பா]

அதிகாரம் வழங்கப்படுகிறது. இறுதி திருத்த நிதியொதுக்கீடு 2013–2014க்கான வரவு செலவுத் திட்டக் கருத்துருக்கள் அனுப்பப்படும்போது, இச்செலவினத்தை சேர்த்து அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.10214/நிதி(சந)/2014, நாள் 26.02.2014–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.2930 (இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது).

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

**பெறுநர்.**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அரசு மறுவாழ்வு இல்லங்கள்,
செல்லியம்பட்டி / பர்கூர் / தேவியாக்குறிச்சி / மனையேறிப்பட்டி / விண்ணப்பள்ளி /
யா. புதுப்பட்டி / புதுக்கோட்டை / மல்லவாடி /பரனூர் / உளுந்தூர்பேட்டை.
(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்**
நிதித் (ச.ந / வ.செ.பொது. II) துறை, சென்னை–9.
செயலரின் முதுநிலை தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இ.கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.